
காலை முரசு
பக்கங்கள் 26
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 21 வெள்ளிக்கிழமை 04.04.2025 | அதிர்வு 242

## துப்பாக்கிச் சூட்டில் ஆண் ஒருவர் பலி!

### பெண் ஒருவர் படுகாயம்

(எஸ்.ஜினோதன்)



ஹிக்கடுவையில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோ கத்தில் ஆண் ஒருவர் 04

## பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்

# இன்று இலங்கைக்கு வருகின்றார் மோடி!

(எஸ்.ஜினோதன்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை இலங்கைக்கு வருகின்றார்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில், அவர் இந்த விஜயத்தை மேற்கொள் கின்றார். 04





## சிக்கலில் நாமல்

### சி.ஐ.டி. விசாரணை ஆரம்பம்

(எஸ்.ஜினோதன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான 04

## ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மீண்டும் சஜித்

### வருடாந்த மாநாட்டில் தெரிவு

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதன் போதே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக சஜித் பிரேமதாஸவின் விசேட வேண்டுகோளின் 04





உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீதான தனது முடிவை உயர் நீதிமன்றம் பெரும்பாலும் இன்று வழங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நேற்று இந்த வழக்குகளின் விசாரணையின் போது இடம்பெற்ற ஒரு சம்பவம் சட்டத்துறை வட்டாரங்களில் அதிகம் பேசப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சில வேட்பு மனுக்கள் உட்பட சில தரப்புகளின் வழக்குகள் சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் முன்னிலையாகி உயர் நீதிமன்றத்தில் வாதிட்டு வருகிறார்.

நேற்று பருத்தித்துறை நகர சபை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தாக்கல் செய்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பான ரிட் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றம் ஒரு விடயத்தைக் கவனித்தது.

அந்த வேட்புமனுவில் ஒரு வேட்பாளரின் விடயம் தொடர்பான சில விவரங்கள் பதியப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி அந்த மனு நிராகரிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவில் சம்பந்தப்பட்ட ஆவணத்தின் மொழிபெயர்ப்பு என்று ஒரு சட்டத்தரணி சான்றுரைத்த பிரதி ஆங்கிலத்தில் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மூல ஆவணத்தில் நிரப்பப்படாத பகுதிகள் மொழிபெயர்ப்பு ஆவணத்தில் நிரப்பப்பட்டவையாக காட்டப்பட்டிருந்தமை நீதிமன்றத்தினால் கண்டுபிடிக்கப்பட்டது. நீதியரசர்கள் ஆயத்தில் தலைமைப் 04

# வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாக செலவு செய்வது குறித்து கலந்துரையாடல்!





வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனாகவும், ஒருங்கிணைந்தும், விரைவாகவும் செலவு செய்வது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன் ஆகியோருக்கும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையிலான மாகாண திணைக்களத் தலைவர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை செலவு செய்வதில் உள்ள பிரச்சினைகள், முன்னுரிமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

முக்கியமாக அரசாங்கத்துக்கு முன்வைக்க வேண்டிய மேலதிக திட்ட முன்மொழிவுகள், வடக்கின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் இவற்றை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதி அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் குறிப்பிட்டனர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மேய்ச்சல் தரவையின்மை, சட்டவிரோத மணல் அகழ்வு பொலிஸார் அதற்கு உடந்தையாகச் செயற்படுகின்றமை தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

இதன்போது பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியாவில் சட்டவிரோத கிரவல் அகழ்வுடன் தொடர்புடையதாக டிப்பர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட நிலையில் பிரதேச செயலர் ஒருவர் அதனை விடுவிக்க தலையீடு செய்திருந்தார் என்றும் குறிப்பிட்டார்.

சட்டவிரோத மணல், கிரவல், கல் அகழ்வு நடவடிக்கைகளுடன் பொலிஸாருக்கு மாத்திரமல்ல அதிகாரிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் கனிய வளங்களுக்கான வழித்தட அனுமதிகளை இறுக்கமாக்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்வுகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

தொடர்ந்து வடக்கு மாகாண பிரதம செயலாளர் மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பான முழுமையான விளக்கத்தை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண விவசாய அமைச்சு அதன் கீழான திணைக்களங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய வன்னித் தேர்தல் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, தெரிவு செய்யப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் தொடர்புடைய திணைக்களத் தலைவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழான பல்வேறு தேவைப்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதன் சுட்டிக்காட்டினார்.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள கால்நடை மருத்துவ அதிகாரிகளுக்கான வாகனங்கள் பற்றாக்குறை மற்றும் கால்நடைகளுக்கான தடுப்பு ஊசிகளுக்கான கட்டணம் அறவிடப்படுதல் உள்ளிட் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் கருத்துக்களைத் தெரிவித்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் மக்களுக்கான காணிகளை கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் தங்கள் பலத்தைப் பிரயோகித்து தமது உடைமையாக்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய பிரதி அமைச்சர், தேர்தல் முடிவடைந்த பின்னர் வன்னிப் பிராந்திய மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார்.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள சில அதிகாரிகள் தமது தனிப்பட்ட பழிவாங்கல்களைத் தீர்ப்பதற்காக விவசாயிகளுக்கான உரமானியங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்காமல் இருக்கின்றனர் என்றும் அவ்வாறு நடைபெறாமல் பார்த்துக்கொள்ளுமாறும் அதிகாரிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்களின் நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மருத்துவமனைகளில் கழிவு நீர் சுத்தகரிப்பு செயற்பாட்டுக்குரிய ஏற்பாடுகள் இல்லாமையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் நிலை தொடர்பாகவும் விரிவாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனைக்கு கட்டடங்கள் உள்ளிட்ட வசதிகள் உள்ளபோதும் அங்கு நோயாளர்கள் குறைவு எனவும் மாஞ்சோலையிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு வசதிகள் இல்லாதபோதும் நோயாளர்கள் அதிகம் எனவும், இது மிகப்பெரிய சிக்கல்களை தோற்றுவித்துள்ளது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்துக்கான ஆளணி உள்ளிட்ட தேவைப்பாடுகளின் பட்டியல்களை தயார் நிலையில் வைக்குமாறும், அதனை தம்முடன் பகிர்ந்து கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் கொழும்பு அமைச்சுக்களுடன் கலந்துரையாடி தம்மால் முடிந்த விடயங்களை செயற்படுத்தித் தருவோம் என உறுதியளித்தனர்.

இதன் பின்னர் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அதன் கீழான திணைக்களங்களின் ஒதுக்கீடுகள் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் விளக்கமளித்தார்.

வன்னிப் பிராந்தியத்திலுள்ள சில பாடசாலைகளின் சூழல்கள் பற்றைகள் வளர்ந்து பராமரிப்பு இல்லாமல் உள்ளன. மலசலகூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவை பயன்படுத்தப்படாமல் உள்ளன என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரியப்படுத்தினர்.

தொடர்ச்சி ▼

# வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாக செலவு செய்வது குறித்து கலந்துரையாடல்!









**தொடர்ச்சி ▲**

இதன்போது பதிலளித்த கல்வி அமைச்சின் செயலர், பல இடங்களில் பாடசாலைகளின் பராமரிப்பே சவாலாக உள்ளதாகக் குறிப்பிட்டார்.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக எந்தெந்தப் பாடசாலைகளில் இவ்வாறான நிலைமைகள் உள்ளன என்பதை அறிந்து அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்ட ஆரம்பித்து இடைநடுவில் உள்ள கட்டடங்கள் தொடர்பில் விரைவில் முடிவெடுக்குமாறும் ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

"வவுனியா நகரப் பகுதியில் பாடசாலைகளின் அதிபர்கள் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்களை வைத்திருக்கின்றனர். இதனால் சில பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கின்றன. சிங்கள பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகர் ஒருவர் வயல் செய்கின்றார். அவர் கையெழுத்து வைத்துவிட்டு வயல் செய்யச் சென்றுவிடுவார். இவ்வாறானவர்களை ஏன் கண்காணிப்பதில்லை? அதேநேரம் பரீட்சை வினாத்தாள்களில் பல பிழைகள் காணப்படுகின்றன." – என்று பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் விளையாட்டு அலுவலர்களை ஏன் வைத்திருக்கின்றீர்கள் என்று கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், அவர்கள் பெயருக்குத்தான் இருக்கின்றார்கள் எனவும் சாடினார். அவர்களுக்கான கண்காணிப்பு பொறிமுறை என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

விளையாட்டு அலுவலர்கள், கலாசார அலுவலர்கள் போன்றோர் மாகாணத்துக்குரிய அலுவலர்களாக இருந்தாலும், பிரதேச செயலகங்களில் கடமையாற்றுவதால் அவர்களுக்கான கண்காணிப்பு பொறிமுறையில் தொய்வு இருப்பதாக கல்வி அமைச்சின் செயலர் குறிப்பிட்டார். அத்துடன் நிர்வாக ரீதியான சவால்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்பின்னர்உள்ளூராட்சிஅமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது சோலை வரி மீளாய்வு, அதிகரித்த வரி அறவீடு என்பன தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனால் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குரிய தீர்வுகள் ஆளுநர் ஊடாக வழங்கப்படும் என அமைச்சின் செயலர் குறிப்பிட்டார்.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்படவுள்ள வீதி அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஆராயப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர்களால் சில முன்மொழிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. மக்களின் தேவைப்பாட்டுக்குரிய வீதிகளுக்கு கூடியளவு முன்னுரிமை கொடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கு அமைவாக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை இறுதியாகக் கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர், "ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவு செய்வதற்கு இன்னமும் 6 மாதங்கள்தான் உள்ளன. வினைத்திறனாகவும் உரிய காலத்துக்குள்ளும் செலவு செய்து முடிக்க வேண்டும். எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பியதாக இருக்கக் கூடாது. இதேநேரம், கடந்த காலங்களில் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்போது திணைக்களங்களில் பணியாற்றும் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்களே பினாமிப் பெயர்களில் அதனைப் பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஒப்பந்தம் கிடைக்காவிடின், ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்டவருக்கான கொடுப்பனவில் இழுத்தடிப்புச் செய்தார்கள். இனி அவ்வாறு செய்வதற்கு இடமளிக்க முடியாது. நீங்கள் உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும். சிட்டைக்கான பணம் விடுவிக்கப்படும் போது தரகுப் பணம் பெற்றமையையும் நாம் அறிவோம். இனி அவ்வாறு இடம்பெற்றால், எந்தவொரு தர நிலையும் பாராது சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு எதிராக நாம் நிச்சயம் நடவடிக்கை எடுப்போம். அதேநேரம், நானோ, எங்கள் அரசாங்க கட்சியின் உறுப்பினர்களோ, யாராவது ஒருவருக்கு ஒப்பந்தத்தை கொடுங்கள் என்று பரிந்துரை செய்யமாட்டோம். ஆனால் ஒப்பந்தங்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதைக் கண்காணிப்போம்." – என்றார்.

அத்துடன் பிரதி அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டத்தை ஒழுங்குபடுத்தியமைக்காக ஆளுநருக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் – நிர்வாகம், நிதி, பொறியியல் ஆகியோரும், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

பொறுப்பில் இருந்தவர் தமிழரான நீதியரசர் துரைராஜா என்பதனால் இந்த மொழிபெயர்ப்பு குளறுபடி உடனடியாக ஆயத்தினால் அவதானிக்கப்பட்டிருக்கக் கூடும்.

இப்படி மொழிபெயர்ப்பில் வேண்டுமென்றே தவறிழைக்கப்பட்டமை நீதிமன்றத்தைத் திட்டமிட்டு ஏமாற்றும் நடவடிக்கை என்று நீதியரசர்கள் கருதமுற்பட்டனர். அதனால் சம்பந்தப்பட்ட வழக்கின் வழிகாட்டல் சட்டத்தரணிக்கும், வழக்காடும் சட்டத்தரணிக்கும் எதிராக நீதிமன்றம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பது மன்றில் சுட்டிக் காட்டப்பட்டது. அதனை அடுத்து, அந்த வழக்கையே – ரிட் மனுவையே – முழுமையாக வாபஸ் பெறுவதாக அதன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தமையால் வழக்கு இடை நடுவில் மனுதாரர் தரப்பினால் விலக்கிக் கொள்ளப்பட்டது. அதற்கு அனுமதித்து, அதன் மூலம் மேல் நடவடிக்கை எடுக்காமல் தவிர்ப்பதற்கு உயர் நீதிமன்றமும் இணங்கியது எனத் தெரிகிறது.

தலைக்கு வர நேர்ந்த ஆபத்து தலைப்பாகையுடன் போனதாக முடிந்தது விடயம்.

* * *

இலங்கையில் நீதித்துறை எப்போதுமே காலம் தாழ்த்தி இழுத்தடிப்பதில் சாதனை புரிந்துதான் வருகிறது. அதுதான் அதன் இயலுமை.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது திடீரென ஒரு நாள் சீனி இறக்குமதிக்கான சுங்க வரி 50 ரூபாவிலிருந்து வெறும் 25 சதமாக அதிரடியாகக் குறைக்கப்பட்டது. ஆனால் இந்த வரி விலக்கால் ஏற்பட்ட நன்மையை நுகர்வோர் பெறத்தக்கதாக சீனியின் விலை குறைக்கப்படவேயில்லை. இறக்குமதி செய்த முதலாளிமார் பழைய விலைக்கு சீனியை விற்று கிலோவுக்கு 50 ரூபா மேலதிகமாகச் சுருட்டிக் கொண்டனர். இதனால் அரசுக்கு 16 ஆயிரம் கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீண்ட இழுபறிக்கு பின்னர் பரிசீலனைக்கு எடுப்பதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு இப்போதுதான் முடிவு கட்டப்பட்டிருக்கின்றது.

தேசிய மக்கள் முன்னணி அரசில் இப்போது அமைச்சராக இருக்கும் சுனில் ஹந்துநெத்தி இந்த வழக்கின் மனுதாரர். அவரது சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அந்த ஊழல் இடம்பெற்று நான்கைந்து வருடங்கள் ஆகிவிட்டன. இது தொடர்பான வழக்கை பரிசீலனைக்கு எடுக்கலாமா என்ற விடயம் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆராயப்பட்டது. நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, சோபித ராஜகருண, சம்பத் விஜேரத்தின ஆகியோர் கொண்ட ஆயத்தின் முன்னால் விடயம் ஆராயப்பட்டது. இந்த வழக்குக்கு எதிராக சம்பந்தப்பட்ட வர்த்தகர்கள் தரப்பில் கிளப்பப்பட்ட தொழில்நுட்ப ரீதியான பூர்வாங்க ஆட்சேபனைகளை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்து, வழக்கை புதிய திகதிக்கு ஒத்தி வைத்திருக்கின்றனது.

பூர்வாங்க தொழில்நுட்ப ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டமையால, இனிமேல் நீதிமன்றம் கூடி, இந்த வழக்கை பரிசீலனைக்கு ஏற்பதா என்பது குறித்து விசாரணை நடத்த இருக்கின்றது. அதற்கு சில காலம் இழுபடலாம். பரிசீலனைக்கு ஏற்றால், அதற்குப் பின்னர் வழக்கை முழுமையாக விசாரித்து, அது முடிவடைந்து, தீர்ப்பு வரும்போது இன்னும் சில ஆண்டுகள் சென்று விடும் என எதிர்பார்க்க முடியும்.

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகி விடும் என்ற நீதித் துறையின் அடிப்படைக் கோட்பாடு இலங்கை நீதித் துறையில் அலட்டிக்கொள்ளப்படும் விடயமாக இல்லை என்பதுதான் பெரும் துரதிஷ்டமாகும்.

## இன்று இலங்கைக்கு...

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு" என்ற எண்ணக்கருவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்த விஜயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட உயர்மட்ட இந்தியக் குழுவும் இணையவுள்ளது.

இந்தியப் பிரதமருக்கான உத்தியோக பூர்வ வரவேற்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதோடு இரு தரப்பு பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பிலும் கலந்துகொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதன்போது எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரிமாறிக்கொள்ளப்படும்.

இந்திய ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத் திட்டம், வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய 5,000 மெட்ரிக் தொன் தம்புள்ள களஞ்சிய வளாகத்தின் நிர்மாணம், 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் என்பவற்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஒன்லைன் ஊடாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேபோல், இந்தியப் பிரதமர் அனுராதபுரம் ஸ்ரீமகா போதிக்கு வழிபாடு மேற்கொள்ள இருப்பதுடன் இந்திய அரசின் அன்பளிப்புடன் நிறுவப்பட்ட மஹவ – அனுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ரயில் பாதையைத் திறந்து வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இலங்கைக்கான சுற்றுப் பயணத்தை நிறைவு செய்துகொண்டு இந்தியப் பிரதமர் நாட்டில் இருந்து புறப்பட்டுச் செல்வார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது இலங்கைப் பயணம் குறித்து எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"பன்முகத்தன்மை கொண்ட இந்தியா – இலங்கை நட்பை நாங்கள் மதிப்பாய்வு செய்வோம். மேலும் ஒத்துழைப்பின் புதிய வழிகளைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவோம். அங்கு நடைபெறும் பல்வேறு சந்திப்புக்களிலும் நான் கலந்துகொள்ளவுள்ளேன்." – என்று இந்தியப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிகரமான இந்திய வருகைக்குப் பின்னர் இந்தப் பயணம் இடம்பெறுகின்றது என்றும் அந்தப் பதிவில் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

## சிக்கலில் நாமல்...

நாமல் ராஜபக்ஷ, சட்டமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முறைகேடான வகையில் பரீட்சைக்குத் தோற்றினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தனர்.

இலங்கை சட்டக் கல்லூரியின் பரீட்சையின்போது நாமல் ராஜபக்ஷ மோசடியில் ஈடுபட்டார் என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் குறிப்பிட்டனர்.

இதனைக் கருத்தில்கொண்ட கொழும்பு நீதிவான் தனுஜா லக்மாலி, இது தொடர்பான முன்னேற்ற அறிக்கையை விரைவில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## ஐக்கிய மக்கள்...

பிரகாரம் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, பொதுச்செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டார மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய அமைப்பாளராக திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொருளாளராக கலாநிதி ஹர்ஷ டி சில்வாவும், செயற்பாட்டுப் பிரதானியாக நளின் பண்டாரவும் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நடப்பாண்டுக்கான புதிய தேசிய செயற்குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## துப்பாக்கிச் சூட்டில்...

உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவை, குமாரகந்த பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இருவரும் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 51 வயதுடைய ஆண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் ஆபத்து

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டெழ முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கும் இலங்கைக்கு, அதன் ஏற்றுமதி பொருள்களுக்கு 44 வீத வரியை அமெரிக்காவின் டிரம்ப் அரசாங்கம் விதித்திருக்கின்றமை பெருத்த அடி என்பதில் வேறு கருத்து இல்லை. இது, இலங்கை எதிர்பாராத ஒரு நெருக்கடி.

“அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த எந்தவொரு வரியாலும் இலங்கை உடனடிப் பாதிப்பை எதிர்பார்க்கவில்லை. ஆனால் நாடு ஒரு புதிய வரிக் கொள்கையை உருவாக்கி வருகின்றது” - எனத் தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி கூறுகின்றார்.

“உடனடியாக அச்சுறுத்தல் இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை, ஆனால் எதிர்காலத்தில் ஒரு புதிய - மாற்று - வரிக் கொள்கையை முன்வைக்க முடியும் என நம்புகிறோம்” என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

மாற்றுத் தெரிவாக ஆசியாவில் உள்ள பிற நாடுகளுடன் எதிர்காலத்தில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுக்கு இலங்கை திட்டமிட்டு வருவதாக அமைச்சர் ஹந்துனெத்தி கூறினார்.

“குறிப்பாக ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில், மலேசியா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைப் பற்றி நாங்கள் யோசித்து வருகிறோம். இன்றும் நாங்கள் கொரியாவின் தூதருடன் கலந்துரையாடினோம்.” - என்று அவர் நேற்றுக் கூறினார்.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பால் இலங்கையின் ஆடை ஏற்றுமதித் துறையே பெரிதும் பாதிக்கப்படும் என்று அவதானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்யும் விடயத்தில் இலங்கைக்குப் போட்டியாக இந்தியாவும் பங்களாதேஷும் உள்ளன. இந்திய ஏற்றுமதிக்கு 26 வீதமும், பங்களாதேஷ் ஏற்றுமதிக்கு 37 வீதமுமே அமெரிக்கா வரி விதித்துள்ளது. இந்த நிலையில் 44 வீத வரி விதிப்பை எதிர்கொண்டுள்ள இலங்கை, மேற்படி இரண்டு நாடுகளுடனும் போட்டி போட்டுக்கொண்டு அமெரிக்காவுக்கு தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வது என்பது பெரும் பின்னடைவைத் தரும் நடவடிக்கையாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கையின் ஆடை ஏற்றுமதிக்கு மற்றொரு பிரதான வளம் கொழிக்கும் சந்தையாக இருப்பது ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கான ஏற்றுமதியாகும். இலங்கைக்கு 2017 முதல் மீண்டும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் தந்திருப்பதனால் மற்றைய நாடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு ஐரோப்பிய சந்தையில் குறைந்த விலையில் தைத்த ஆடைகளை இலங்கையால் ஏற்றுமதி செய்ய முடிகிறது.

ஆயினும், நல்லாட்சி முறைமை, மனித உரிமைகளைப் பேணுதல், தொழிலாளர் நலம் பேணுதல் போன்றவை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்க்கும் தரநிலையை இலங்கை பேணாத காரணத்தினால் இந்த வரிச் சலுகையையும் இலங்கை இழக்கும் ஆபத்தில் உள்ளது. இந்த வரிச்சலுகையைப் பெறுவதற்காக பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவது, இணையவழிப் பாதுகாப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்களைச் செய்வது உட்பட பல வாக்குறுதிகளை அளித்துள்ள இலங்கை, கடந்த பல ஆண்டுகளாக அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இழுத்தடித்து ஏமாற்றி வருகிறது.

இந்தப் பின்புலத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையையும் இலங்கை இழக்குமானால், இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் அதல பாதாளத்தில் விழுந்து, மீண்டெழவே முடியாமல் அடிபட்டுப் போவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.




# தையிட்டியில் சட்ட விரோத விகாரை அமைப்பு; எமக்கு போதனை வேண்டாம் நீதி தாருங்கள்!

## பாதிப்புற்ற காணி உரிமையாளர்கள் உறுதியுடன் வலியுறுத்தல்

காணி விடுவிப்புத் தொடர்பிலோ, மதங்கள் தொடர்பிலோ எமக்கு போதனைகள் செய்யவேண்டாம். அனைவருக்கும் சமமாக இருக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தி எமது நியாயமான கோரிக்கைக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என தையிட்டி திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் வலி வடக்கு தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பான கலந்துரையாடலுக்காக யாழ்ப்பாணம் வருகை தந்த நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார உள்ளூராட்சிமன்ற தேர்தலை காரணம் காட்டி கலந்துரையாடலின் இடை நடுவில் எழுந்து சென்றமை பாதிக்கப்பட்ட மக்களை அவமானப்படுத்துவதாக அமைந்தமையுடன் தங்களுக்கு ஏமாற்றத்தையும் அளித்துள்ளதாகவும் கலந்துரையாடலில் பங்குபற்றியவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் அவர்களின் பிரதிநிதி கூறியவை வருமாறு:-

யாழ் தையிட்டிப் பகுதியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய திஸ்ஸ விகார தொடர்பில் நேற்று வியாழக்கிழமை யாழ் நாக விகாரையில்

நீதி அமைச்சரின் பங்குபற்றலுடனான கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு மதத்தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் காணி உரிமையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.



இந்நிலையில் இந்தக் கலந்துரையாடலுக்கு வருகை தந்த நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூட்டம் ஆரம்பித்து சிறிது நேரம் பங்கேற்ற நிலையில், தேர்தல் காலம் காரணமாக இந்தக் கலந்துரையாடலிலிருந்து விலகிச் செல்கின்றார் எனக் கூறி அவ்விடத்தை விட்டு நழுவிச் சென்றிருந்தார்.

இதையடுத்து திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி உரிமையாளர்கள் சிலர் தமது ஆதங்கங்களை ஊடகங்கள் முன்னால் இவ்வாறு தெரிவித்தனர்.

தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ விகாரை தொடர்பில் நீதி அமைச்சருடன் கலந்துரையாடல் இடம்பெறும் என எமக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் கலந்து கொண்டோம்.

கலந்துரையாடல் இடம் பெறுவதற்கு முன்னர் நீதி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமான தேசிய நல்லிணக்க சகவாழ்வு மையம் எமது தையிட்டிப் பகுதிக்கு வருகை தந்து காணி உரிமையாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கலந்துரையாடலில் ஈடுபடும் போது உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டாம் என கூறிய நிலையில் வேட்பாளர்களாக போட்டியிடுபவர்கள் கலந்துரையாடல் பங்கு பற்றவில்லை.

யாழ் நாக விகாரையில் மாலை இடம் பெற்ற நீதி அமைச்சருடரான கலந்துரையாடலுக்கு அனைவரும் அழைக்கப்பட்டனர்.

கலந்துரையாடலுக்கு வருகை தந்த அமைச்சர் தனது தலைமை உரையில் சமாதானம், விட்டுக்கொடுப்பு எனப் போதனைகளைச் சொல்லிவிட்டு தேர்தல் காலம் என்பதால் நான் செல்கிறேன் என கூறி எழுந்த சென்று விட்டார்.

நாங்கள் பல எதிர்பார்ப்புடன் இந்தக் கலந்துரையாடலுக்குச் சென்ற நிலையில் நீதி அமைச்சர் இடை நடுவில் எழுந்து சென்றமை குறித்த கலந்துரையாடலுக்கு வருகை தந்த

சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் மற்றும் தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் ஒரு விடயமாகப் பார்க்கிறோம் .

அமைச்சர் சென்ற நிலையிலும் கலந்துரையாடல் தொடர்ந்தது.

நாம் தெளிவாக கூறினோம். நாங்கள் மதங்களை மதிப்பவர்கள். சட்டவிரோதமாக



தொடர்ச்சி ▼

# தையிட்டியில் சட்ட விரோத விகாரை அமைப்பு; எமக்கு போதனை வேண்டாம் நீதி தாருங்கள்!

தொடர்ச்சி ▲

அமைக்கப்பட்ட கட்டடத்தைத்தான் அகற்றச் சொல்கிறோம். இதை நீங்கள் மதவாதமாகவே இனவாதமாகவோ சித்திரிக்க வேண்டாம்.

எமது காணி என்பதற்கான ஆதாரம் – ஆவணம் – எம்மிடம் இருக்கிறது. எமக்குப் போதனை வேண்டாம், சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் எனக் கூறினோம்.

கலந்துரையாடலைத் திசை திருப்பும் முகமாக அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் என்ற அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துரையாடலின் இறுதியில் எழுந்து நின்று தையிட்டிப் பகுதியில் அறுநூறுக்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங்கள் வாழ்ந்தன எனவும் அவர்கள் மீள்குடியேற அனுமதி கோருகிறார்கள் எனவும் தெரிவித்தனர்.

தையிட்டி விகாரை தொடர்பில் பேசுவதற்காக அழைத்துவிட்டு, சிங்களக் குடும்பங்களை மீள்குடியேற அனுமதிகேட்கும் கலந்துரையாடலாக இறுதியில் அதனை மாற்ற நினைக்கிறார்கள்.

நாங்கள் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அமைப்பினர் முன்வைத்த கருத்து தொடர்பில் எதிர் கருத்து தெரிவிப்பதற்கு நேரம் கேட்டோம். எமக்கு வழங்கப்படவில்லை.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் அரசியல்வாதிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற நிலையில், ஆளுங்கட்சியில் உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடல்களில் பங்கு பற்றினர்.

ஆனால் விகாரை தொடர்பான கூட்டத்துக்கு மட்டம் நீதி அமைச்சர் தேர்தல் காலம் என கூறி இடை நடுவில் எழுந்து சென்றமை ஏற்கக்கூடிய விடயம் அல்ல. – என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நீதி அமைச்சர் பங்குபற்றும் கலந்துரையாடலுக்கு பொது அமைப்பின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் எதிர்வரும் 11 ஆம் திகதி பிரதமரும், 17 ஆம் திகதி ஜனாதிபதியும் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

(எஸ்.ஜினோதன்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச். ஜே.எம். சி. அமித் ஜயசுந்த அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பரீட்சைக்கான விண்ணப்பங்களை இன்று 4 ஆம் திகதி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை இணைய வழி ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

எக்காரணம்கொண்டும் விண்ணப்பங்களைப் பெறுவதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிக்கப்படாது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அரச பாடசாலை அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 5 மாணவர்கள் மாத்திரமே தோற்ற முடியும்.

பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமாக உள்ள மாணவர்கள் 11 வயதுக்கும் குறைந்தவர்களாககே காணப்பட வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கும் விண்ணப்ப வழிமுறைகளுக்கும் https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தள முகவரியைப் பிரவேசிக்கலாம்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதற்கான வழிமுறைகளும் குறித்த இணையத்தள முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.” – என்றார்.

தொலைபேசி எண்கள் – 011-2784537, 011-2786616, 011-2784208 011-2786200, 011-2784201

மின்னஞ்சல் முகவரி – http://gr5schexam@gmail.com

அவசர எண் – 1911

தொலைநகல் எண் – 011-2784422

# கச்சதீவு பிரச்சினையை வைத்து தமிழகத்தில் வாக்கு வேட்டை அரசியல் நடக்கின்றது

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

“கச்சதீவு பிரச்சினையை வைத்து தமிழகத்தில் வாக்கு வேட்டை அரசியல் நடத்தப்பட்டு வருகின்றது. எது எப்படி இருந்தாலும் கச்சதீவென்பது இலங்கைக்குரியதாகும்.”

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் மற்றும் கச்சதீவு பிரச்சினை என்பன தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் தேர்தல் வருவதாக இருந்தால், அதனோடு சேர்ந்து கச்சதீவு பிரச்சினையும் வந்துவிடும். அதேபோல தேர்தல் பிரசாரத்திலும் அது பேசுபொருளாக மாறும். கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலங்களிலும் இது பற்றி பேசப்பட்டது. தற்போது முதல்வர் மு.கா. ஸ்டாலினும் அவ்வழியை கையாண்டுள்ளார்.

ஆனால் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை சர்வதேசம் கூட அங்கீகரித்துள்ளது.

எனவே, தமிழகத்தில் தேர்தலுக்கு வேண்டுமானாலும் கச்சதீவு பிரச்சினையை வைத்து விளையாடலாம். அது இலங்கைக்குரியது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.




தமிழக மீனவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசுடமையாக்கப்பட்டுள்ள கப்பல்களை ஆழ்கடலில் மூழ்கடிப்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. அதன் பயன்பாடு தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது.

பாரத பிரதமர் மோடியின் வருகை என்பது மீனவர்களுக்கான வருகை அல்ல. 13 ஆவது திருத்தத்துக்கான வருகையும் அல்ல. அவ்வாறு கூறிக்கொண்டு வேண்டுமானால் இங்குள்ள தமிழ்க் கட்சிகள் சுய திருப்தி அடையக்கூடும்.” என்றார்.

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் 456 முறைப்பாடுகள் பதிவு




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை 456 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் 423 முறைப்பாடுகளும் வேறு குற்றங்கள் தொடர்பில் 29 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 43 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வன்முறை சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடொன்றும், ஏனைய சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் 41 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள 456 முறைப்பாடுகளில் 422 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் 34 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.









# பருத்தித்துறை பொதுச் சந்தை புதிய கட்டத்திற்கு மாற்றம்

## முன்னர் இயங்கிய மரக்கறிச் சந்தைக்கு நகரசபையால் பூட்டு

(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை பொதுச் சந்தை நேற்றிலிருந்து புதிய கட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன், முன்னர் இயங்கிய மரக்கறிச் சந்தை நகரசபையால் மூடப்பட்டுள்ளது.

இதனால், வியாபாரிகள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டதுடன், புதிய கட்டத்திற்கு போகமாட்டோம் என பழைய சந்தை முன் வியாபாரிகள் அமர்ந்திருந்தனர்.

பருத்தித்துறை நகரில் இதுவரை இயங்கிவந்த மரக்கறி சந்தையை சுமார் நூறு மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்திற்கு மாற்றுவதர்க்காக முன்னறிவித்தல் வழங்கி இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணத்தால் வியாபரிகள் வியாபரத்தை பகிஷ்கரிப்பதாக அறிவித்திருந்தனர்.

புதிய சந்தைக்கு மரக்கறி வியாபரத்தை மேற்கொள்ளுமாறு சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறை நகரசபையால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை எதிர்த்து மரக்கறி வர்த்தகர்களால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு எதிர்வரும் ஜுன் 20ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ள நிலையிலேயே, பருத்தித்துறை நகரசபையால் நேற்று முன்தினம் அறிவித்தல் ஒட்டப்பட்டும், ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டும் நேற்று மரக்கறி சந்தை புதிய கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வியாபாரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அதிகமான மரக்கறி வியாபாரிகள் வியாபாரம் நடவடிக்கையிலிருந்து விலகி தமது எதிர்பினை வெளிப்படுத்திய நிலையில், ஒரு சில வர்த்தகர்கள் புதிய மரக்கறிச் சந்தை கட்டட தொகுதியில் வியாபரத்தை ஆரம்பித்தனர்.

புதிய மரக்கறி சந்தை பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஒரு ஒருவழிப்பாதை என்பதுடன் அவ் வீதியில் மீன்சந்தைக்கு செல்கின்றபோது போக்குவரத்து நெரிசல் காணப்படுவதுடன், வாகன தரிப்பிட வசதிகள் இல்லை எனவும் பொருள்களை இறக்கி ஏற்றுவது பாரிய இடர்பாடுகள் உள்ளன எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் கருத்துத் தெரிவிக்கையில்,

"பருத்தித்துறை நீதிமன்றில் வியாபாரிகளால் தொடுக்கப்பட்ட வழக்கில் இடமாற்றத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டருந்தது.


கடந்த தவணையின் போது அந்த இடைக்கால தடை உத்தரவு நீதிமன்றினால் நீக்கப்பட்டு உத்தரவு பிறப்பக்கப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை நகரசபையினர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான சட்ட திட்டங்களுக்கமைய இந்த புதிய சந்தைக்கு வியாபார நடவடிக்கையினை மாற்றம் செய்வதென தீர்மானிக்கப்பட்டு இடமாற்ற அறிவித்தல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது." என்றார்.










# கடனை செலுத்தத்தவறிய சிறு, நடுத்தர தொழில் முனைவோருக்கு மீண்டும் கடன்

வங்கிக் கடன் மறுசீரமைப்பின் போது மூன்றாம் காலக் கொண்டு வரை கடனை செலுத்தத் தவறிய சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய வங்கிச் சட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டம் வரை கடனை செலுத்தத் தவறிய நபரொருவர் மறுசீரமைப் பின் பின்னரும் மூன்றாம் கட்டத்தை செலுத்தத் தவறியவரா கவே கருதப்படுவார் என பிரதியமைச்சர், கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார்.

அதன்காரணமாக குறித்த நபரால் புதிய கடன்களுக்கு விண்ணப்பிக்க முடியாது.

புதிய தீர்வின் படி இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் கைத்தொழில் அமைச்சின் பரிந்துரை களின் பேரில் கடனை மீளச் செலுத்தாதவர்கள் மேலதிக கடன்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த புதிய தீர்வின் மூலம் இவ்வருட வரவு செலவுத்திட்டத் தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்க ளுக்கு ஒதுக்கப்பட்ட 5 பில்லியன் ரூபா நிதி எவ்வித சிக்கலு மின்றி விநியோகிக்கப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

கடனை மீளச் செலுத்தாத சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பட்டயக் கணக்கியல் நிறுவனம் மற்றும் கைத் தொழில் அமைச்சின் பரிந்துரைகளைப் பெறுவதற்கான கலந்துரையாடலுக்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் வகையில் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 9 மாதங் களுக்குள் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்படும் கடன்கள் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப் படும் என நிதி பிரதியமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டி னார்.

# இந்தியாவுடன் இணைந்து உற்பத்தி பொருள்களை ஏற்றுமதி செய்ய இலங்கை ஏற்றுமதி சபை தீர்மானம்

ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் இணைந்து உற்பத்தி பொருள்களை ஏற்றுமதி செய்ய இலங்கை ஏற்றுமதி சபை தீர்மானித்துள்ளது.

ஜப்பானின் அழைப்பின் பேரில் இந்த தீர்மானம் எடுக் கப்பட்டதாக சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க தெரி வித்தார்.

கைத்தொழில் உற்பத்திகளுக்கான மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள் ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான் வெளிநாட்டு சந்தை நிறுவனம், ஜப்பானின் பொருளாதார வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதி மற்றும் இலங்கை ஏற்றுமதி சபையின் அதிகாரிகள் ஆகியோருக்கு இடையில் அண்மையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தியா, இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையில் கைத்தொழில் உற்பத்திகளுக்கான பொருள் ஏற்றுமதியை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இங்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# 23 பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையால் நடவடிக்கை

23 பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருள்களின் விலைகளை காட்சிப்படுத்தாமை, அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தியமை மற்றும் பொருட்களில் குறிப்பிட வேண்டிய தகவல்கள் இன்றி விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் 172 பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சுமார் 6.5 மில்லியன் ரூபா அபராதம் வசூலிக்கப்பட்டது.

பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட சந்தைகளில் பொருள்களை கொள்வனவு செய்யும் போது காலாவதி திகதி மற்றும் பிற தகவல்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபை மக்களை அறிவுறுத்தியுள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகாரசபை நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை ஆரம்பித்துள்ளது.







# வட்டுவாகலில் களமிறங்கிய விஷேட அதிரடிப்படை; ஐவர் கைது, ஒருவர் கைவிலங்குடன் தப்பியோட்டம்

(பா.சதீசன்)

வலை மற்றும் சட்டவிரோத படகுகளை கைப்பற்றிய நபர்கள் வட்டுவாகல் பகுதிக்கு வந்ததனை தொடர்ந்து நேற்று குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

நந்திக்கடல் களப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கு எதிரான நடவடிக்கையில் கடற்தொழில் திணைக்களம், வட்டுவாகல் கடற்படை, கடற்தொழில் இணையம், கடற்தொழில் சங்கங்கள் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத தொழிலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் வட்டுவாகல் களப்பில் நேற்று 50 வலை தொகுதிகளும், 9 படகுகளும் கைப்பற்றப்பட்டிருந்தன.

இந்நிலையில் அந்த இடத்திற்கு வலை, படகுகளின் உரிமையாளர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் வட்டுவாகல் பாலத்தடியில் ஒன்று கூடியதனை தொடர்ந்து அந்த இடத்தில் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

இதனால், ம்பவத்துடன் தொடர்புடைய 6 நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள். ஷ

அத்தோடு கைது செய்யப்பட்ட ஒரு நபர் கைவிலங்குடன் தப்பியோடியுள்ளார். இதனையடுத்தே நேற்று குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. இதனால் அவ்விடத்திற்கு பொலிஸார், விஷேட அதிரடி படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து நபர்களும் மந்துவில் , வலைஞர் மடம் புதுக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

மேற்படி ஐவரையும் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் 14 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். அத்தோடு கைவிலங்குடன் ஓடிய நபரை கைது செய்ய திறந்த பிடியாணையும் விடுக்கப்பட்டுள்ளது.

















# மேர்வின் சில்வாவுக்கு மீண்டும் விளக்கமறியல்



முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் இரு சந்தேக நபர்களும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரையும் மஹர நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கிரிபத்கொட பகுதியில் உள்ள அரசாங்க நிலத்தைப் போலி பத்திரங்களைப் பயன்படுத்தி விற்பனை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூன்று பேர் கடந்த மார்ச் மாதம் 5 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டனர்.



# ஓட்டிசம் நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை உயர்வு

ஓட்டிசம் எனப்படும் நரம்பியல் வளர்ச்சி கோளாறு நோயினால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்தியர் ஸ்வர்ணா விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள 93 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் எனப்படும் நரம்பியல் வளர்ச்சி கோளாறு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.








# சென்னையில் இருந்து காங்கேசனை வந்தடைந்த இரு பாய்மரப் படகுகள்!

(ந.லோகதயாளன்)

சென்னையில் இருந்து காங்கேசன்துறைக்கு 8 பேர் அடங்கிய சுற்றுலாப் பயணிகளுடன் 2 பாய்மரப் படகுகள் காங்கேசன்துறையை வந்தடைந்தன.

400 கிலோமீற்றர் தூரத்தை இலக்காபக்கொண்டு 'Royal Madras Yacht Club' அங்கத்தவர்களால் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட இப் படகுப் பயணம் நாகப்பட்டினத்தை அடைந்து அங்கிருந்து காங்கேசன் துறையை வந்தடைந்தது. மீண்டும் நாகப்பட்டினம் செல்லவுள்ள இப்படகு பின்னர் பூம்புகாரை அடைந்து அங்கிருந்து பாண்டிச்சேரியை வழியாக கோவளத்துக்குச் சென்று இறுதியில் பயணம் மீண்டும் சென்னையில் நிறைவடையவுள்ளது.

பயணிகளை வரவேற்கும் நிகழ்வில் வடமாகாண ஆளுனர் நா.வேதநாயகன், வடமாகாண சுற்றுலாப்பணியக அதிகாரிகள், துறைமுக அதிகாரசபை அதிகாரிகள், சுற்றுலாத்துறை சார்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.














# ஒட்டுசுட்டானில் பெண்ணைக் கொடூரமாகத் தாக்கிய சந்தேகநபர் நேற்று மாலையில் கைது செய்யப்பட்டார்





(பா.சதீசன்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்ன சாளம்பனில் பெண்ணொருவரைக் கொடூரமாகத் தாக்கிவிட்டு தலைமறைவான நபரை உடனடியாக கைதுசெய்ய வேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று பொலிஸாரிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையில் அந்த நபர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமொற்றில் பணியாற்றும் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பன் பகுதியைச்சேர்ந்த இருபெண்களுக்கிடையில் ஏற்பட்ட கத்து முரண்பாட்டையடுத்து, பெண்ணொருவரின் கணவர், மற்றைய பெண்ணை வீதியில் வைத்து மிகக் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

இது தொடர்பான காணொலிப் பதிவு சமூக ஊடகங்களில் பரவியது.

கொடூரமாகத் தாக்கப்பட்ட பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பெண்ணைத் தாக்கிய நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும், தாக்கிய நபரை உடனடியாகக் கைதுசெய்ய வலியுறுத்தியும் அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பெண்ணைத் தாக்கிய நபரைக் கைதுசெய்ய வலியுறுத்தி முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்குமுன்பாக அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்பகுதி மக்களின் அழைப்பை ஏற்று அந்த இடத்திற்கு விரைந்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பெண்ணை கொடூரமாகத் தாக்கிய சந்தேக நபர் உடனடியாகக் கைதுசெய்யப்பட வேண்டுமென பொலிஸாரிடம் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய 24 மணி நேரத்திற்குள் சந்தேகநபர் கைதுசெய்யப்படுவார் என ஒட்டுசுட்டான் பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடமும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடமும் உத்தரவாதமளித்திருந்தனர்.

சந்தேக நபர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனைத் தொடர்பு கொண்டு தெரிவித்திருக்கின்றார்.



# ஐ.தே.க. முக்கியஸ்தர்களுடன் நேற்று யாழ். மாவட்ட வேட்பாளர்கள் சந்திப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் தலதா அதுகொரள மற்றும் உதவி தலைவர் அகில விராஜ் காரியவசம், வேட்பாளர்கள் கலந்துகொண்டனர்.








# நல்லைக் குருமாமணியின் 44ஆவது குருபூஜை இன்று

யாழ்ப்பாணம் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகரும், முதல்வருமாகிய ஸ்ரீல ஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் குருபூஜை பங்குனி திருவாதிரை நாளான இன்றாகும்.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமாதி அடைந்த சுவாமிகளின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அடுத்த நாள் ஆதீனத்தில் விபூதியிட்டு சமாதியிடப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டது.

இம்முறையும் இன்று வெள்ளிக்கிழமை பங்குனி திருவாதிரையன்று சுவாமியின் 44 ஆவது குருபூஜை நடைபெறுகிறது. இன்று காலை 10 மணி அளவில் அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆதினத்தில் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.



# யாழ் மாவட்ட வாக்குச் சீட்டுகள் இன்று எடுத்து வரப்படுகின்றன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 உள்ளூராட்சி சபைகளிற்கான வாக்குச் சீட்டுக்கள் இன்று 4ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாவட்டத்திற்கு எடுத்து வரப்படுகின்றன.

மே மாதம் 06 ஆம் திகதி இடம் பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிற்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் முடிவுற்று வாக்குச் சீட்டுக்கள் மாவட்டத்திற்கு எடுத்து வரப்படுகின்றன.

வாக்குச் சீட்டுக்களை பொறுப் பேற்று எடுத்து வருவதற்காக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு எடுத்து வரப்படும் வாக்குச் சீட்டுக்களின் ஒரு பகுதி பொதி செய்யப்பட்டு அரச திணைக்களங்களிற்கு தபால் மூல வாக்களிப்பிற்காக வரும்7 திகதி தபாலில் சேர்க்கப் படவுள்ளது.

இதேநேரம் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிற்கான வாக்குச் சீட்டுக்கள் ஏற்கனவே எடுத்து வரப்பட்டுவிட்டன.



# வவுனியாவில் 15 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியாவில் 15 கிலோ கஞ்சா விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளதுடன், மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என நெளுக்குளம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வவுனியா, கணேசபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 15 கிலோ கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, அதனை உடைமையில் வைத்திருந்த கணேசபுரம், கூமாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 - 32 வயதிற்குட்பட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபர்கள் நெளுக்குளம் பொலிஸாரிடம் விசேட அதிடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் அவர்களை முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# அமெ. வரிக் கொள்கை பற்றி நாம் எதிர்வு கூறியபோது ஒலிவாங்கியைத் துண்டித்து எம்மைப் பரிகசித்தது அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசனம்





இன்றைய நிலைவரப்படி, உலகின் அனைத்து நாடுகளிற்குமான புதிய இறக்குமதி வரியை ஐக்கிய அமெரிக்கக் குடியரசு அறிவித்துள்ளது. வர்த்தக நிலுவையை கொண்டுள்ள நாடுகளிற்கு அமெரிக்கா அதிகளவு வரிகளை விதித்துள்ளது. இலங்கையில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. முழு நாட்டையும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தையும் கவலையடையச் செய்துள்ள இந்த விடயம் குறித்து பல மாதங்களுக்கு முன்னரே நாம் எச்சரித்திருந்தோம். இருந்த போதிலும் அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசும்போது, ஒலிவாங்கியை துண்டித்து, எம்மை பரிகசித்து தற்காலிக மகிழ்ச்சியை அரசாங்கம் பெற்றுக் கொண்டது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நமது நாட்டின் மீது 44 சதவீத வரியை அமெரிக்கா விதித்ததன் மூலம் நமது நாட்டின் ஏற்றுமதி பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளது. குறிப்பாக ஆடைத் துறை பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. இதன் காரணமாக, ரணசிங்க பிரேமதாஸவினால் நிறுவப்பட்ட 200 ஆடைத் தொழிற்சாலைகளும், எமது நாட்டின் ஏற்றுமதித் துறையை நம்பி வாழும் லட்சக்கணக்கான மக்களின் வேலை வாய்ப்புகளும் ஆபத்தில் காணப்படுகின்றன. அரசாங்கம் இவற்றை கவனத்திற்கொள்ளாது செயல்பட்டு வருகின்றது. அரசாங்கம் வழமையான பொய்களை கூறி மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றி வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் வைத்து அரசாங்கத்திடம் முன்வைத்த போது, இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு விசேட தூதுக் குழுவொன்று அனுப்பி வைக்கப்படும் என கூறப்பட்டது. அரசாங்கத்தால் எப்போது இவ்வாறான ஒரு தூதுக் குழு அனுப்பட்டது? இதற்காக அனுப்பப்பட்ட தூதுக் குழு உறுப்பினர்கள் யார்? என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. மேலும் பொய் சொல்லாமல் இந்த தூதுக் குழுவின் மூலம் அடைந்துள்ள முன்னேற்றத்தை வெளிப்படுத்துங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

“தொலைதூரம் காண்போம் - அணி திரள்வோம் -எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்” எனும் தொனிப் பொருளில் ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு நேற்று கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு மாநாட்டு உரையை நிகழ்த்தும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

நமது நாட்டின் ஏற்றுமதியைப் பாதுகாக்க விசேட திட்டமொன்று தேவை. வர்த்தகம் தொடர்பிலான விசேட பிரதிநிதி மற்றும் சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான விசேட நிபுணர்கள் குழுவை நியமித்து அவர்களை உடனடியாக வொஷிங்டனுக்கு அனுப்புங்கள். அமெரிக்க ஜனாதிபதியோடு கலந்துரையாட வேண்டும். இது தொடர்பில் முன்னரும் பல தடவைகள் அரசாங்கத்திடம் எடுத்துரைத்த போதிலும், அரசாங்கம் அதனை பொருட்படுத்தவில்லை.

நாட்டிற்கு பலமும் பயனும் தரும் இராஜதந்திர உறவுகளை முன்னெடுக்க இந்த அரசாங்கத்திற்கு எந்த இயலுமை இல்லை. எமது நாட்டின் ஏற்றுமதிக்கு அழிவு ஏற்பட்டுள்ள இந்த வேளையில், தொழிற்சாலைகளில் பணியாற்றும்

தொடர்ச்சி ▼

# அமெ. வரிக் கொள்கை பற்றி நாம் எதிர்வு கூறியபோது ஒலிவாங்கியைத் துண்டித்து எம்மைப் பரிகசித்தது அரசு

தொடர்ச்சி ▲

அனைத்து சகோதர, சகோதரிகளுக்கும் தமது தொழிலை பாதுகாத்துத் தர பொறுப்பான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி உங்களுக்காக தனது கடமைகளை நிறைவேற்றும்.

2019 இல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி நாட்டை வங்குரோத்தடையச் செய்தமை போல், 2024 இல் ஆட்சிக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி ஒட்டுமொத்த அரசியலையும் வங்குரோத்தடையச் செய்துள்ளார். பொய்யினாலும் ஏமாற்றினாலும் மக்களின் நம்பிக்கையை சிதறடித்து இன்றைய முழு அரசியலையுமே வங்குரோத்தடையச் செய்துவிட்டார். பெரும் மக்கள் ஆணையைப் பெற்ற தற்போதைய ஆளுந்தரப்பினர், அரச ஊழியர்கள், ஓய்வு பெற்ற சமூகத்தினர் உட்பட சாதாரண மக்களை எல்லா வகையிலும் ஏமாற்றியுள்ளனர். அவர்கள் உருவாக்குவதாகச் சொன்ன மறுமலர்ச்சி இதுதான்.

முந்நூறுக்கும்மேற்பட்ட கொல்கலன்களை எந்தப் பரிசோதனைகளும் இன்றி இஷ்டத்துக்கு விடுவித்துள்ளனர். இன்று ஒட்டுமொத்த சமூகமும் குற்றவாளிகளின் பிடிகளில் சிக்கும் வரை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்கிறது. மக்கள் எதிர்பார்த்த மறுமலர்ச்சி யுகம் இதுவல்ல. - எனவும் எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மேலும் தெரிவித்தார்.







# தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் வவுனியாவில் இதுவரை 4 முறைப்பாடுகள்

## மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தகவல்

(கி.வசந்தன்)

தேர்தல் செலவுகளை வெளிப் படுத்தும் சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் இதுவரை 4 முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற – உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான – கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் பிரசார அலுவலகங்கள் அமைத்தல் மற்றும் சட்டதிட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

விசேடமாக, 154 வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு நடைபெறுகின்ற போதும், இம்முறை உள்ளூராட்சி தேர்தல் சட்டத்திற்கு அமைய வட்டாரங்களில் வாக்குகள் எண்ணப்பட்டு வெளியிடப்பட இருக்கின்றது. அதற்கு அமைவாக 5 உள்ளூராட்சி சபைகளிலும் உள்ள 56 வட்டாரங்களிலும் வாக்குகள் எண்ணப்படும். ஒரு வட்டாரத்தில் பல வாக்களிப்பு நிலையங்கள் இருந்தாலும் ஒரு நிலையத்திற்கு பெட்டிகள் கொண்டு வரப்பட்டு தனித்தனியாக எண்ணப்பட்டு பெறுபேறுகள் வெளியாகும்.



தேர்தல் செலவுகளை வெளிப் படுத்தும் சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அனைத்து வேட்பாளர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தேர்தல் முடிந்த பின் தேர்தல் செலவுகளை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காவிடின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அது பெரியளவில் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக தேர்தல் செலவினங்கள் மற்றும் அதனை எவ்வாறு சமர்ப்பிப்பது தொடர்பில் வேட்பாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நீதியானதும், நியாயமானதுமான ஒரு தேர்தலை எதிர்பார்க்கின்றோம். ஒரு வாக்காளர் யாருக்கு வாக்களிக்கின்றார் என்பதை தவிர, அனைத்து விடயங்களும் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்படுகின்றது. முறைப்பாட்டு பிரிவு தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கான தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரைக்கும் 4 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. நான்கும் சிறிய முறைப்பாடுகள். தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பானவை. தேர்தல் வன்முறை தொடர்பில் எவையும் பதிவாகவில்லை. அதில் 3 முறைப்பாடுகள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. ஒரு முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தபால் மூல வாக்கெடுப்பு காலப் பகுதியில் பிரசார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு கட்சிகள் மற்றும் சுயேடச்சைக் குழுக்களிடம் கோரியுள்ளோம். தபால் மூல வாக்களிப்புக்கான ஏற்பாடுகளில் அதனை பொதி செய்து அனைத்து நிலையங்களுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கை எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்கெடுப்பு எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறும். 22 ஆம் திகதி தேர்தல்கள் அலுவலகம், மாவட்ட செயலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் இடம்பெறும். ஏனைய அரச திணைக்களங்கள் மற்றும் முப்படையினரின் தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறும். அதில் தவறுபவர்கள் இம்மாதம் 28, 29 ஆம் திகதிகளில் மாவட்ட செயலகத்தில் வாக்கினைச் செலுத்த முடியும். இந்த காலப்பகுதியில் வாக்களிப்பு இடம்பெறும் திணைக்களங்களுக்கு அண்மித்த பகுதியில் பிரசார நடவடிக்கைகளை மட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளோம். – எனத் தெரிவித்தார்.





# வவுனியாவில் வேட்பாளர்களிற்கு தேர்தல் குறித்து அறிவுறுத்தல்கள்

(கி.வசந்தன்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வவுனியா மாவட்ட வேட்பாளர்களிற்கான தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நேற்று இடம்பெற்றிருந்தது

வவுனியா தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நகரசபை கலாச்சார மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம் பெற்றிருந்தது.

வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி.ஏ.சரத்சந்திர, மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் ஆகியோர் தேர்தல் நடவடிக்கை மற்றும் பிரசார நடவடிக்கைகளின் போது வேட்பாளர்கள் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் செயற்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பாகவும், தேர்தல் சட்ட திட்டங்கள் தொடர்பாகவும், பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதில் வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.








# ஜனநாயக சக்தியை திரட்டி பாசிசத்தை வீழ்த்துவோம்!

## மதுரை மார்க்சிஸ்ட் மாநாட்டில் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

இந்தியா முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டி, இணைந்து போராடி பாசிசத்தை வீழ்த்துவோம் என மதுரையில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

மதுரையில் மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு நடைபெற்று வருகிறது. மாநாட்டின் 3 ஆவது நாளான நேற்று 'கூட்டாட்சி கோட்பாடே இந்தியாவின் வலிமை' என்னும் தலைப்பில் சிறப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. ங்கிணைப்பாளர் பிரகாஷ் காரத் நோக்கவுரையாற்றினார்.

இதில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

"மதுரை நகரை தூங்கா நகரம் என்று சொல்வோம். அந்த தூங்கா நகரம் இன்று சிகப்பு மாநகரமாக மாறியுள்ளது. எங்கும் சிகப்பு நிறைந்திருப்பதை பார்த்து மகிழ்ச்சியடைகிறேன். தி.மு.க. கொடியில் பாதி சிகப்பு உள்ளது. கொடியில் மட்டும் இல்லை. எங்களில் பாதி நீங்கள். திராவிட இயக்கத்துக்கும், பொதுவுடைமை இயக்கத்துக்கும் இடையே கருத்தியல் நட்பு உண்டு. அதன் அடையாளமாகத்தான் இங்கு வந்திருக்கிறேன்.

தன்னை ஒரு கொம்யூனிஸ்ட் என அடையாளப்படுத்தி கொண்டவர் கருணாநிதி. காரல் மார்க்சுக்கு சிலை வைப்பதாக அறிவித்து விட்டு உங்களில் பாதியாக இங்கு வந்திருக்கும் என் பெயர் ஸ்டாலின். நமது பயணமும் பாதையும் மிக நீண்டது. 2019 முதல் இணை பிரியாமல் இருக்கிறோம். யாரை எதிர்க்க வேண்டும், எதற்காக எதிர்க்க வேண்டும் என்பதில் தீர்க்கமாக இருக்கிறோம். இந்த கூட்டணியில் விரிசல் ஏற்படாதா? என சிலர் நப்பாசையில் இருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணம் நிறைவேறாது. இங்கு இருக்கிற யாரும் அதற்கு இடம் தர மாட்டோம்.

கூட்டாட்சி என்ற சொல்லே மத்திய ஆட்சியாளர்களுக்கு அலர்ஜி ஆகி விட்டது. மத்திய அரசால் அதிகம் பாதிக்கப்படுவது நானும், கேரள முதல்வரும் தான். எனவே, எங்கள் பேச்சுக்களை வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளலாம். மத்திய அரசு பல்வேறு சட்டங்கள் மூலம் மாநில உரிமைகளை பறிக்க பார்க்கிறது. பல்வேறு சட்டங்கள் மூலம் மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்கிறார்கள். ஜி.எஸ்.டி. மூலம் மாநில அரசின் நிதி உரிமையை எடுத்துக்கொண்டனர். எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கு அனுமதி வழங்குவதில்லை.

எதிர்கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களை பா.ஜ.க. மாநிலத் தலைவர்கள் போல் செயல்பாட்டு முழுநேர அரசியல் வாதியாக செயல்பட வைக்கிறீர்கள். மாநிலங்களே இருக்க கூடாது என நினைக்கிறீர்கள். வக்பு சட்டத்தை நள்ளிரவில் நிறைவேற்றி உள்ளார்கள். இந்த சட்டத்துக்கு எதிராக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். நீதிமன்றத்திலும் வழக்கு தொடரவுள்ளோம். அரசமைப்பு சட்டத்தின் முதல் வரியே பல்வேறு மாநிலங்களின் ஒன்றியம் தான் இந்தியா என்பது தான். அதனால் தான் ஒன்றிய அரசு என்கிறோம். சட்டத்தில் இல்லாததை கூறவில்லை. இதையே அவர்களால் தாங்க முடியவில்லை. அதிகார பரவலாக்கலை அவர்கள் விரும்பவில்லை.

மத்திய – மாநில அரசுகளின் உறவை மேம்படுத்த சர்க்காரியா, பூஞ்சி ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு அறிக்கையை செயல்படுத்த வேண்டும் என 2012 இல் முதல்வராக இருந்த மோடி கோரிக்கை வைத்தார். மூன்றாம் முறையாக பிரதமராகி உள்ள மோடி அவர்களே, அந்த கோரிக்கையை நிறைவேற்ற நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? இதற்கு தமிழகத்துக்கு வரும் போது பிரதமர் மோடி பதில் சொல்ல வேண்டும். மக்களுக்கு எதிரான பா.ஜ.க. ஆட்சியின் முடிவில் தான் இந்தியாவின் கூட்டாட்சி மலரும். அதற்காக இந்தியா முழுவதும் உள்ள ஜனநாயக சக்திகளை ஒன்று திரட்டுவோம். இணைந்து போராடி பாசிசத்தை வீழ்த்துவோம்," என்றார்.

# வக்பு திருத்த மசோதாவை திரும்பப் பெறவேண்டும்

## போராட்டம் நடத்துவோம் என்கிறார் த.வெ.க. தலைவர் விஜய்



ஜனநாயகத்துக்கு எதிரான வக்பு சட்டத் திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் இந்திய அரசமைப்பு மாண்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் தமிழக வெற்றிக் கழகம் கட்சித் தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ஒன்றிய பா.ஜ.க. அரசால் மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள வக்பு சட்டத் திருத்த மசோதா, மதச் சார்பற்ற இந்திய ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் அரசமைப்பின் மாண்பையும் மீண்டும் ஒருமுறை கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு, தொடர்ந்து அரசமைப்பின் மீது களங்கம் ஏற்படுத்தி வரும் ஒரு மோசமான போக்காக, வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

இந்தியாவில் உள்ள இஸ்லாமிய சகோதரர்கள் தங்களின் வழிபாட்டு முறையிலான பண்பாட்டு வாழ்வைப் பின்பற்றும் அனைத்து உரிமைகளையும் இந்திய அரசமைப்பு சட்டம், இஸ்லாமியத் தனியுரிமைச் சட்டங்கள் வழியே அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கிறது. வக்பு வாரியச் சட்டம் என்பது, முஸ்லிம்களின் இறையியல் வாழ்வு மற்றும் சமூகப் பொருளாதாரத்தோடு பின்னிப் பிணைந்தது. இஸ்லாமியத் தனியுரிமைச் சட்டத்தின் முக்கிய அமைப்பு. வக்பு வாரியச் சட்டத்தைச் சிதைப்பது என்பது சிறுபான்மையினருக்கு நம் அரசமைப்பும் நம் நாட்டின் தலைவர்களும் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் காற்றில் பறக்க விடுவதன்றி வேறென்ன?

ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொண்டு வரும் பெரும்பான்மைவாத மற்றும் பிளவுவாத அரசியலானது இஸ்லாமியச் சகோதரர்களைத் தொடர்ச்சியாகப் பாதுகாப்பற்ற நிலையிலும் அச்சத்திலும் உறைய வைத்திருக்கும் உளவியல் தாக்குதலன்றி வேறென்ன? கையில் ஆட்சி அதிகாரம் இருக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக கூட்டணிக் கட்சிகளின் துணையோடு, எந்தவொரு சமூக நல்லிணக்கத்துக்கு எதிரான சட்டத்தையும் நிறைவேற்றிவிடலாம் என்ற மனநிலை கொண்ட ஆட்சியாளர்கள், மக்களின் தன்னெழுச்சி மூலம் எதிர்கொண்ட விளைவுகளை வரலாறு முழுக்க நாம் பார்த்திருக்கிறோம்.

இஸ்லாமியச் சிறுபான்மையினரின் நலன் காக்கவே இச்சட்டத் திருத்தம், எதிர்க்கட்சியினர் அவர்களைத் தவறாகத் திசைதிருப்புகிறார்கள் என்ற வெற்று வாதத்தை ஒன்றிய ஆளும் கட்சியினர் முன்வைக்கின்றனர். ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்வது போல, இது இஸ்லாமியர்களின் நலன் காக்கும் சட்டம் என்பது உண்மையானால், அதைத் தாக்கல் செய்யக் கூட அவர்களிடம் ஏன் இஸ்லாமியப் பிரதிநிதி ஒருவர்கூட இல்லை? ஜனநாயக அவையில் அதுபற்றி விவாதிக்கப் போதுமான இஸ்லாமிய உறுப்பினர்கள் இல்லையே ஏன்?

இதுதான் இன்று பா.ஜ.க. அரசு நிறுவியுள்ள மிக மோசமான பெரும்பான்மைவாத ஆதிக்க அரசியல். இந்தியாவின் அனைத்து எதிர்க்கட்சிகளும் மற்றும் ஜனநாயகச் சக்திகளும் இந்தச் சட்டத் திருத்த மசோதாவை எதிர்க்கின்றன. ஒருமித்த குரலில் ஒன்றிய அரசின் செயலைக் கண்டிக்கின்றன.

நம் நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயக விழுமியங்களையும் மறுத்து தனது பெரும்பான்மைவாத ஆதிக்கத்தின் துணையோடு, இஸ்லாமியச் சகோதரர்களுக்கு எதிரான அரசியலைக் கையில் எடுத்துள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு, தமிழக வெற்றி கழகத்தின் வன்மையான கண்டனங்கள்.

நாட்டின் ஒட்டுமொத்த ஜனநாயகக் குரல்களுக்கும் செவிமடுக்கும் விதமாக ஜனநாயகத்துக்கு விரோதமான இந்தச் சட்டத் திருத்த மசோதாவை உடனே திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகம் வலியுறுத்துகிறது. ஒன்றிய அரசு இதனைச் செய்யாத பட்சத்தில், இஸ்லாமிய சகோதரர்களோடு இணைந்து அவர்களின் வக்பு உரிமை சட்டப் போராட்டத்தில் தமிழக வெற்றிக் கழகமும் பங்கேற்றுப் போராடும்.” என்று குறிப்பிட்டுள்ளார்..

# பென்குயின்கள் மாத்திரம் வசிக்கும் தீவுக்கும் வரி விதித்தார் ட்ரம்ப்





அமெரிக்கா தனது நாட்டிற்கு இறக்கு மதி செய்யும் அனைத்துப் பொருள்க ளுக்கும் 10 வீத அடிப்படை வரியை விதிக்கும் என்றும், மலேசியா உட்பட பல நாடுகளுக்கு அதிக வரிகளை விதிக் கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

டொனால்ட் ட்ரம்பின் வர்த்தகப் போரில் எதிர்பாராத திருப்பமாக, பனிப் பாறைகள், பெங்குயின்கள் மட்டுமே வசிக்கும் அண்டார்டிகாவிற்கு அருகி லுள்ள தொலைதூர, மக்கள் வசிக்காத எரிமலைத் தீவுகள், அவுஸ்திரேலியா வின் பிரதான நிலப் பகுதிகளும் அடங் கியுள்ளன.

அவுஸ்திரேலிய எல்லைக்கு வெளியே உள்ள ஹியர்டு தீவு மற்றும் மெக்டொனால்டு தீவுகள், பூமியில் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட இடங்க ளில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

இந்தத் தீவுகளை அடைய பெர்த்தி லிருந்து இரண்டு வாரங்கள் படகுப் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தில் எந்த மனிதனும் அங்கு காலடி எடுத்து வைத்த தில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் இத் தீவுகளை யும் உள்ளடக்கிய ட்ரம்பின் வரி விதிப்பு குறித்து பதிலளித்துள்ள அவுஸ்திரே லிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ், "பூமியில் எங்கும் பாதுகாப்பு இல்லை" என்று கூறினார்.

"ட்ரம்ப் நிர்வாகத்தின் கட்டணங்கள் தர்க்கரீதியான அடிப்படையைக் கொண் டிருக்கவில்லை, மேலும் அவை நமது இரு நாடுகளின் கூட்டாண்மையின் அடிப்படைக்கு எதிரானவை. இது ஒரு நண்பரின் செயல் அல்ல," என்று அல்பானீஸ் கூறினார்.

அதே நேரத்தில், அவுஸ்திரேலியா அமெரிக்கா மீது பரஸ்பர வரிகளை விதிக் காது என்றும் கூறினார்.

அவுஸ்திரேலிய அண்டார்டிக் திட்டத் தின்படி, வானிலை நிலையைப் பொறுத்து மேற்கு அவுஸ்திரேலியா வில் உள்ள ஃப்ரீமண்டில் இருந்து கப்பல் மூலம் ஹியர்ட் தீவை அடைய தோரா யமாக 10 நாள்கள் ஆகும்.

இந்த தீவில் பெங்குயின்கள், நீர் நாய்கள் மற்றும் பல்வேறு பறவை இனங்களின் காலனிகள் உள்ளன, அவற்றில் சில தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு அந்தஸ்தைப் பெற்றுள்ளன.

இந்நிலையில், நேற்று புதன்கிழமை வெள்ளை மாளிகையில் மிகவும் எதிர் பார்க்கப்பட்ட உரையில், 78 வயதான ட்ரம்ப், 180 நாடுகளுக்கு 'தயவு' மற்றும் 'பரஸ்பர' வரிகளை அறிவித்தார்.

இது அமெரிக்காவை "மீண்டும் செல்வந்தராக" மாற்றும் என்றும், "மீண் டும் எழுச்சி பெறும்" வேலைகளைக் கொண்டுவரும் என்றும் கூறினார்.

தனது உரையின் போது, இந்தியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், தாய்வான், தென் கொரியா, பங்களா தேஷ், இலங்கை மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் அமெரிக்கப் பொருட் களுக்கு விதித்துள்ள வரிகளை விவரிக் கும் விளக்கப்படத்தை ட்ரம்ப் காட்சிப் படுத்தினார்.

இந்த நாடுகள் இப்போது பதிலுக்கு பரஸ்பர வரிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அவர் வலியுறுத்தினார்.

# பயண விதிமுறையினை திருத்தியது பிரித்தானியா




பிரித்தானிய அரசாங்கம் தனது பயண விதிமுறைகளை புதிப்பித் துள்ளது.

அதன்படி, இங்கிலாந்து செல்லும் ஐரோப்பிய பயணிகளுக்கு நேற்று புதன்கிழமை முதல், புதிய ஒன் லைன் நுழைவு அனுமதி (Online Entry Permit) அத்தியாவசிய மாக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பை மேம்படுத்துவதை யும் நுழைவு நடைமுறைகளை ஒழுங்கு படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இந்த நடவடிக்கை, கண்டத்திலிருந்து வரும் பயணிகளுக்கு ஒரு குறிப்பிடத் தக்க மாற்றத்தைக் குறிக்கிறது.

புதிய ஒன்லைன் நுழைவு அனுமதி, இங்கிலாந்தின் எல்லை அமைப்பை நவீனமயமாக்கும் பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்தத் தேவை உடனடியாக அம லுக்கு வந்தாலும், பல மாதங்கள் நீடிக்கும் இடையகக் காலம் பயணி களை புதிய முறைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள அனுமதிக்கும்.

புதிய ஆன்லைன் நுழைவு அனுமதி திட்டத்தின்படி, இங்கிலாந் துக்குள் நுழைய விசா தேவையில் லாத அனைத்து பயணிகளும் 10 பவுண்டுகள் (12 யூரோக்கள்) செலவில் பயணத்திற்கு முந்தைய அனுமதியை ஆன்லைனில் வாங்க வேண்டும்.

இது ஏப்ரல் 9 முதல் 16 பவுண்டுகளாக உயரும். அயர்லாந்து குடிமக்கள் இதில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இந்த விதிமுறை முதன்முத லில் கடந்த ஆண்டு ஐரோப்பியர் அல் லாத நாட்டினருக்கு விரிவுபடுத்தப்பட்டது, இதில் அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து வரும் பயணிகள் அடங்குவர்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.04.2025



## மேஷம்

இன்று செய்ய வேண்டிய காரியங்களை எதிர்கொள்வது கடினமாக இருக்கும். உங்கள் பொறுமையை இழக்க நேரிடலாம். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் உறுதியும் அவசியம்.

இன்று பணிகள் சுமுகமாக நடப்பதற்கு சாத்தியமான நாளாக அமையாது. பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணை உங்களை உதாசீன்படுத்துவதன் காரணமாக உங்களுக்கு எரிச்சல் ஏற்படும்.உங்கள் எரிச்சல் உணர்வுகளை அவரிடம் வெளிப்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. அதனால் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் பயனுள்ள வகையில் அதை பயன்படுத்த முடியாது.



## ரிஷபம்

உங்கள் செயல்களை உறுதியுடன் மேற்கொள்வதற்கு மிகுந்த பொறுமை அவசியம்.செயல்களில் தாமதம் நேரலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு செய்ய வேணடியது அவசியம்.

உங்களுக்கும் உங்கள் துணையாருக்கும் இடையேயான குறைவான புரிந்துணர்வு காரணமாக அவரிடம் உங்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

தேவையற்ற கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம். உங்களிடம் குறைந்த பணமே காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மனஅழுத்தம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். நீங்கள் மிகவும் சோர்வாகவும் அசௌகரியமாகவும் உணர்வீர்கள்.



## மிதுனம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது அவசியம் மற்றும் நல்லது.

உங்களிடம் காணப்படும் சிறப்பான திறமை காரணமாக உங்கள் பணிகளை நன்றாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். நல்ல புரிந்துணர்வையும் அனுசரணையான அணுகுமுறையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படாது. செலவினங்களையும் எதிர்கொள்ள நேரலாம்.

இன்று பதற்றம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.



## கடகம்

உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக செயல்களை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் நலனுக்கான பயனுள்ள முடிவுகளை விரைந்து எடுப்பதற்கு உங்கள் மனமும் விரைவாகச் செயல்படும்.

இன்று சிறந்த வெற்றி கிடைக்கும். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பதவி உயர்வு என்ற பெயரில் அங்கீகாரம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனது உணர்ச்சிக்கு ஆட்பட்ட நிலையில் இருக்கும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அது உங்கள் உறவை வளர்க்க உதவும்.

இன்று வளர்ச்சி காணப்படும். வசதியுடன் இருப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பை அதிகரிக்கச் செய்வீர்கள்.



## சிம்மம்

உங்கள்அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழலில் சில ஏமாற்றங்களை உணர்வீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு குறைந்து காணப்படும். அதனால் பணி வளர்ச்சி பாதிக்கப்படும்.

நீங்கள்இன்று மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடத்தில் அந்த உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் அவருடன் உங்களுக்கு நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

செலவுகளும் பொறுப்புகளும் அதிகரிக்கும் காரணத்தால் இன்று கணிசமான தொகை சேமிக்க இயலாது.



## கன்னி

ஆன்மீகச் செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சி காணலாம். முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்கு தேவையான முக்கியமான விஷயங்களில் ஒன்று கடவுள் வழிபாடு.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக பலன்கள் கிடைக்கும். அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

இன்று உங்கள் துணையுடன் ஒரு இணக்கமான உறவை பராமரிக்க இயலாது. குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரலாம்.

குறைந்த அளவு பணமே காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.



## துலாம்

நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். நேர்மறையான அணுகுமுறை அவசியம். தியானம் மற்றும் பிரார்த்தனை உங்களை சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும்.

இன்று முடிக்க வேண்டிய பணியில் உங்கள் சக பணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். அதனால் பணிகள் நிலுவையில் இருக்கும். சகபணியாளர்கள் உங்களை நிந்திப்பார்கள்.

உங்கள் துணையுடன் கவனமாக பழக வேண்டும். உங்கள் இருவருக்கும் இடையே தொடர்பாடலில் சில குறைபாடுக்ள காணப்படும்.

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக அமையாது. பண இழப்புகள் காரணமாக உங்கள் கையிருப்பு கரையும் வாய்ப்பு காணப்படுகின்றது.



## விருச்சிகம்

இன்றைய நாள் சமநிலையுடன் காணப்படும். நீங்கள் நினைத்ததை அடைவதற்கு குறைந்த அளவு முயற்சியே போதுமானதாக இருக்கும். உங்களுடைய இலக்குகளும் இலட்சியங்களும் சற்று இலகுவாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணியாற்றும் விதத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் சகபணியாளர்களுக்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாக திகழ்வீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

இன்று மிகவும் கலகலப்பாக காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான எண்ணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிர்ஷ்டத்தின் சாயல் காணப்படும். அதன் காரணமாக கணிசமான தொகையை தக்க வைத்துக் கொள்ள வழி கிடைக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.04.2025




இன்றைய நாள் அபாரமான நாளாக இருக்கும். உங்கள் தொடர்பாடல் திறமை மூலமாக உங்கள் பிரியமானவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும் திறம்பட செயலாற்ற கால அட்டவணையை பின்பற்ற வேண்டும்.

இன்று மாலை உங்கள் துணையை சந்திப்பீர்கள். இது உங்கள் இருவருக்கும் ஒரு நல்ல சந்திப்பாக அமையும். மகிழ்ச்சி தரும் வார்த்தைகளைப் பேசி உங்கள் துணையை திருப்திபடுத்துவீர்கள்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். நிதிநிலையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் காணப்படாது. ஆடை ஆபரணம், ஆடம்பரப் பொருள்கள் போன்ற பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.




எதிர்மறை எண்ணங்கள் தோன்றலாம். அதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் வெற்றி காண்பது கடினம்.

பணியில் அதிக பொறுப்புகளை சுமக்க நேரிடும் பணியில் கவனம் செலுத்த வேண்டும். உங்களின் மேலான கவனம் பணியில் முன்னேறிச்செல்ல வழிகாட்டும்.

நீங்கள் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் காணப்படுவீர்கள். அதனை உங்கள் அணுகுமுறையிலும் வெளிப்படுத்துவீர்கள். அதனால் தேவையற்ற சச்சரவுகள் ஏற்படலாம்.

பணவளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும். பணஇழப்புகள் ஏற்படலாம்.

தொண்டையில் தொற்று ஏற்படலாம். வெந்நீர் குடிப்பதன் மூலம் உபாதைகள் குறையலாம்.




எதையோ இழந்தது போன்று உணர்வீர்கள். சோர்வுடன் காணப்படுவீர்கள். அதனை தவிர்த்து சுறுசுறுப்புடனும் நேர்மறை எண்ணத்துடனும் இருக்க முயலுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியில் உங்களின் வேலையின் தரம் குறைந்து காணப்படுவதன் காரணமாக உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளின் கேள்விக்கு ஆளாகும்.

உங்கள் துணையுடன் பேசும்பொழுது கோபமான உணர்ச்சி காணப்படும். நல்லுறவை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்து எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளப் பழகுங்கள்.

கூடுதல் சுமைகள் காரணமாக இன்று பணத்தை அதிக அளவில் செலவு செய்ய நேரிடும்.




இன்றைய நாள் துடிப்புடன் காணப்படும். வெற்றிக்கான முயற்சி செய்வீர்கள். திடமான சிந்தனையும் செயலாக்கமும் காணப்படும். வெற்றிக்கான உங்கள் முயற்சி ஜெயிக்கும்.

உங்கள் பணியில் தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது. எனவே பணியில் கவனமாக இருப்பது நல்லது.

உங்கள் துணையுடன் தார்மீக நெறிமுறைகளை கையாள்வீர்கள். இதனால் அவரை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வீர்கள்.

உங்களிடமுள்ள பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள். நல்ல முதலீட்டு ஆலோசனைகளில் பங்குபெறுவீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

# அருண் தம்பிமுத்து பிணையில் விடுவிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் நிதி மோசடி பிரிவினரால் கைது செய்யப்பட்ட தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் அருண் தம்பிமுத்துவை 3 கோடியே 28 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதிவான் நேற்று வியாழக்கிழமை அனுமதித்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த – கனடா நாட்டிலுள்ள – தனிநபர் ஒருவருடன் இணைந்து இருவரும் வர்த்தக நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்ட நிலையில், அந்த வர்தகத்திற்கு அவரிடமிருந்து இருந்து 3 கோடி 70 லட்சம் ரூபா பணத்தை பெற்று அதற்கான வர்தக நடவடிக்கை இடம்பெறமால் நிதியை மோசடி செய்தார் என கனடா நாட்டிலுள்ள தனிநபர் கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் நிதி மோசடி பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து அந்த முறைப்பாட்டுக்கு அமைய அருண் தம்பிமுத்துவை பாசிக்குடாவில் தனியார் ஹோட்டலில் இருந்த நிலையில், அவரை கொழும்பில் இருந்த வந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அவரை நேற்று மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அருண் தம்பிமுத்து சார்பாக ஆஜராகிய கமேகே தலைமையிலான சட்டத்தரணிகள், இது ஒரு சிவில் வழக்கு, வர்த்தம் தொடர்பானது, இதனை நிதி மோசடி என சோடிக்கப்பட்டு முறைப்பாடு செய்துள்ளனர் என வாதங்களை முன்வைத்த நிலையில் நீதிவான் அவரைப்பிணையில் விடுவித்து, எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.